இனம் | INAM (IIETS)
E-ISSN: 2455 - 0531 | UAN: TN0300061112
மலர் : 10 | இதழ் : 39 | ஆகஸ்ட் | 2024 | Vol.: 10 | Issue: 39 | August | 2024

# அறிவுசார் சொத்துக்களின் பதிப்புரிமையைப் பெறுவதற்கான தேவையும் வழிமுறையும் Requirement and Method of Obtaining Copyright of Intellectual Property

ந.இராஜேந்திரன் | N.Rajendran[2] ORCID, பா.கவிதா | P.Kavitha[2] ORCID

[1] Assistant Professor, Department of Tamil, PSG College of Arts and Science, Coimbatore – 641 014.
nrajendran@psgcas.ac.in Ph.No - 9597536324.

[2] Assistant Professor, Department of Tamil, PSG College of Arts and Science, Coimbatore – 641 014.
nrajendran@psgcas.ac.in Ph.No - 9597536324.

DOI: **10.5281/zenodo.13294453**

**ஆய்வுச்சுருக்கம் (Abstract)**

அறிவுசார் சொத்துக்களைப் பயன்படுத்த அப்படைப்பாளரின் அனுமதியைப் பெறுவது அவசியமாகும். அப்படைப்பாளரின் அனுமதியைப் பெறாமல் கருத்தையோ, ஆய்வையோ அல்லது எழுத்தையோ நகலெடுத்துத் தன்னுடைய சொந்த முயற்சியில் உருவானதுபோல் திருட்டுத்தனமாகப் பயன்படுத்தினால் அது தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படும். பணம், பொன், பொருள்களைத் திருடுவது மட்டும்தான் திருட்டு என்பது அல்ல. பிறருடைய கருத்துக்களைத் திருடுவதும் திருட்டுதான். அவ்வகையில் தற்காலத்தில் கல்வி சார்ந்த எழுத்துத் துறைகளில் கருத்துத்திருட்டு பரவலாக நிகழ்ந்துகொண்டிருக்கிறது. இத்திருட்டைத் தவிர்ப்பதற்குப் படைப்பாளர்கள் தமது படைப்புகளைப் பதிப்புரிமை (Copyright) செய்து கொள்ள வேண்டும். ஒருவரது எண்ணத்தில் உருவாகும் அறிவுசார் சொத்துக்களைப் பிறர் எளிமையாகத் திருடி அவருடைய கருத்தைப் போல் பதிவுசெய்துவிடுகிறார்கள் என்பதை அறிந்துகொண்ட இந்திய அரசு இக்குற்றத்தைக் களைவதற்காகவே தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான துறையை (Copyright Division, Department For Promotion of Industry and Internal Trade) உருவாக்கியுள்ளது. இத்துறை 19 வகையான பிரிவுகளைக் கொண்டுள்ளது.

It is necessary to obtain the permission of the Creator to use the intellectual property. It is a punishable offense to copy an opinion, study, or writing without obtaining the author's permission and using it as if it were one's initiative. Theft is not only about stealing money, gold, and things. Stealing other people's ideas is also plagiarism. In this way, there is widespread disinformation in the field of academic, writing these days. To avoid this mistake, creators should copyright their works. The Government of India has created the Department for Promotion of Industry and Internal Trade (Copyright Division, Department for Promotion of Industry and Internal Trade) to eliminate this crime after knowing that others simply steal the intellectual property created in one's mind and register it as his idea. The department consists of 19 different divisions.

**திறவுச்சொற்கள் (Keywords):** ந.இராஜேந்திரன், பா.கவிதா, அறிவுசார் சொத்து, பதிப்புரிமை, அறிவுத் திருட்டு, ஒழுக்க மீறல்.

## முன்னுரை

பதிப்புரிமை (Copyright) என்பது ஒரு தனிநபரின் இலக்கியம், கலை, இசை, நாடகம், கணினி மென்பொருள், வடிவமைப்புகள், வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் சின்னங்கள், பெயர்கள், படங்கள் ஒலிப்பதிவு மற்றும் திரைப்படம் உள்ளிட்ட படைப்புகளின் எழுத்தாளருக்கோ, கலைஞருக்கோ மற்றும் உரிமையாளருக்கோ அவர்களது தனிப்பட்ட உரிமைகளைப் பாதுகாக்கும் அங்கீகரிக்கப்பட்ட சட்டமாகும். பதிப்புரிமையில் மேற்குறிப்பிட்ட பல பிரிவுகள் இருப்பினும், எழுத்துத்துறையில் அறிவுசார் சொத்துக்களை ஏன் பதிப்புரிமை செய்ய வேண்டும்? செய்வதற்கான

தேவை என்ன? பதிப்புரிமை செய்வதற்கான வழிமுறை என்ன? என்பது பற்றி ஆராய்ந்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

**அறிவுசார் சொத்து என்றால் என்ன?**

“அறிவுசார் சொத்து (IP) என்பது கண்டுபிடிப்புகள் போன்ற மனதின் படைப்புகளைக் குறிக்கிறது; இலக்கியம் மற்றும் கலைப்படைப்புகள்; வடிவமைப்புகள்; வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் சின்னங்கள், பெயர்கள் மற்றும் படங்கள்” போன்றவை அறிவுசார் சொத்தாக அழைக்கப்படுகிறது. (https://www.wipo.int/about-ip/en/)

**அறிவுத் திருட்டு என்றால் என்ன?**

அறிவுத் திருட்டு (Intellectual theft) என்ற சொல் எழுத்துத்துறை சார்ந்த திருட்டுக்களைச் சுட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் சொல்லாகும். “அறிவுத் திருட்டு எனப்படுவது ஒருவரின் கருத்து, மொழி மற்றும் தகவல்களைத் திருடுவதாகும். எல்லாவித ஆய்வுகளுக்கும் மற்றவருடைய கருத்துக்களைப் படிக்க, மீள்பார்வை செய்ய, தேவைப்படின் சொந்தப் படைப்பில் பதிவு செய்ய அனைவருக்கும் உரிமை உண்டு. ஆனால், அவ்வாறு மீள்பதிவு செய்யும்போது அம்மூலப் பதிவின் உரிமையாளரின் உழைப்பையும் கண்டுபிடிப்பையும் மதிக்கும் வகையில் மேற்கோள் காட்டுவது அவசியம். அப்படிச் செய்யத் தவறும் தருணத்தில்தான் அறிவுத் திருட்டு நிகழ்கிறது” என்பார் விஜயலட்சுமி (August/1/2014). இத்தகைய அறிவுத் திருட்டு நடைபெறாமல் இருப்பதற்குப் படைப்பாளர்கள் தங்கள் படைப்புகளைப் பதிப்புரிமை செய்வது அவசியமாகும்.

**ஒழுக்க மீறல்**

ஒழுக்கம் உடையவராக வாழ்வதுதான் உயர்ந்த குடிப்பிறப்புக்கு எடுத்துக்காட்டாகும். ஒழுக்கம் தவறுகிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் இழிந்த குடியில் பிறந்தவர்களாகவே கருதப்படுவர் என்பார் வள்ளுவர். இதனை,

> “ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
> இழிந்த பிறப்பாய் விடும்” (குறள்.133)

எனும் குறள் விளக்கும்.

அறிவுத் திருட்டு என்பது ஒருவகை ஒழுக்க மீறல் எனலாம். அறிவுத்துறை சார்ந்த மோசடியாகவும் இதை நாம் புரிந்துகொள்ளலாம். அறிவுத் திருட்டில் ஈடுபடுகின்ற குற்றவாளிகள் சிலருக்கு விழிப்புணர்வு குறைவாக உள்ளதே இதற்குக் காரணமாகவும் அமைகின்றது. அறிவுத் திருட்டு என்று சொன்னவுடன் எழுத்துக்களைத் திருட முடியுமா? என்ற கேள்வி உங்கள் மனதில் எழலாம். எழுத்து கருத்தாக மாறி வரிவடிவம் பெறும் ஒவ்வொன்றும் ஒருவரின் அனுபவம், கற்ற கல்வியால் பெற்ற பயன், சிந்தனை ஆற்றலின் குழந்தையாகத் தோன்றிய அறிவுசார்ந்த சொத்தாகும். அதனைப் பிறர் சுயலாபத்திற்காகப் பயன்படுத்தும்போது ஒழுக்க மீறலாகக் கருதப்படுகிறது.

**ஏன் பதிப்புரிமை செய்ய வேண்டும்?**

“பதிப்புரிமை என்பது இந்திய அரசியலமைப்பின் கீழ் அறிவுசார் சொத்துரிமையின்கீழ் வரும் சட்டத்தால் படைப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஒரு உரிமையாகும்” என்பார் பூமி மது (அக்டோபர் 31, 2020). இந்த உரிமையின்கீழ் ஒவ்வொரு படைப்பாளர்களும் தங்கள் சொந்த முயற்சியில் உருவான படைப்புகளைப் பதிப்புரிமை செய்ய வேண்டும். செய்யவில்லை எனில் உங்கள் படைப்புகளைப் பிறர் திருடி அவர்கள் படைப்பாக மாற்றி அமைத்துப் பதிவுசெய்து சொந்தம் கொண்டாடி விடுவார்கள். எப்பொழுதாவது அது உங்கள் கருத்து எனத் தெரியவரும் சமயம் நீங்கள் அவர்களிடம் சென்று உங்கள் கட்டுரையில் அல்லது நூலில் இடம்பெற்றிருக்கும் கருத்து என்னுடையது. என் அனுமதி இல்லாமல் நீங்கள் பதிவு செய்திருக்கிறீர்கள் என்றுரைத்தால் அதற்கு என்ன சாட்சி உண்டு என்று அவர்கள் உங்களைப் பார்த்துக் கேட்பார்கள். நீங்கள் முறையாகப் பதிப்புரிமைப் பெற்றிருந்தால் மட்டுமே அவர்களிடம் உங்கள் சான்றிதழைக் காண்பித்து உங்கள் கருத்துக்கு நீங்கள் சொந்தம் கொண்டாட முடியும். இல்லையேல் உங்கள் கருத்து பிறர் கருத்தாக மாறிவிடும்.

**பதிப்புரிமை செய்வதற்கான தேவை என்ன?**

2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8 ஆம் தேதி டெல்லி பதிப்பில் வெளியான ஆங்கில நாளிதழ் ஒன்றில் "ஒருவரின் படைப்பைத் திருடியதாகக் கண்டறியப்பட்டால் அப்படைப்பாளரின் படைப்பை ரத்து செய்ய நேரிடும். மற்றும் குற்றம் நிரூபிக்கப்பட்டால் அப்படைப்பாளரின் எந்தப் படைப்பும் வெளியிடப்பட மாட்டாது. மேலும், அவரின் வருடாந்திர ஊதியமும் மறுக்கப்படலாம். எந்த மாணவர் கூட்டத்தையும் அறிஞர் கூட்டத்தையும் சந்திக்கக் கூடாது." (2017/செப்டம்பர்/08, பின்னிணைப்பு - 1). என்று அந்த ஆங்கில நாளிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், இந்த அறிவுத் திருட்டு பல ஆண்டுகளாகக் கல்வித்துறையில் நடந்து வருகிறது என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. இன்றைய காலச்சூழலில் அனைத்துக் கல்வி சார்ந்த துறைகளும் தனிமனிதர்களும் தங்கள் படைப்புகளை இணையதளத்தில் எளிதில் கிடைக்கும் வண்ணம் மின்னூலாக மாற்றி வெளியிட்டு வருகின்றனர். இணையத்திலிருந்து அடுத்தவருடைய கருத்தை எளிதில் பதிவிறக்கம் செய்துகொள்ளவும் நகலெடுத்து ஒட்டிக்கொள்ளவும் வசதியாக இருப்பதால் அடுத்தவருடைய கருத்தைத் தன் கருத்தாகச் சொல்லிக்கொள்ளும் ஒரு திருட்டுக்கூட்டம் பெருகி வருகிறது. இந்தக் குற்றம் நடக்காமல் இருப்பதற்கு ஒவ்வொரு படைப்பாளர்களும் தங்கள் படைப்புகளைப் பதிப்புரிமை செய்து கொள்ள வேண்டும். அவ்வாறு பதிப்புரிமை செய்யப்பட்ட அறிவுசார் சொத்துக்களை யாரேனும் தங்களுடைய நூலில் அல்லது ஆய்வுக்கட்டுரையில் படைப்பாளரின் பெயரைச் சுட்டி மேற்கோளாகக் காட்டாமல் அப்படியே தன் கருத்துப்போல் பயன்படுத்தினால் அது குற்றமாகக் கருதி அவர் மீது வழக்குத் தொடுக்க வேண்டும். மேலும் இழப்பீடாக உரிய தொகையும் வசூலிக்கப்பட வேண்டும். அவ்வாறு வழக்குத் தொடுப்பதற்கும், உரிய இழப்பீட்டைப் பெறுவதற்கும் பதிப்புரிமை தேவையாக உள்ளது.

தெரிந்தே அறிவுத்திருட்டில் ஈடுபடுகின்றவர்களுக்கு மத்தியில் தெரியாமல் அல்லது எதிர்பாராத விதமாக சிலர் அறிவுத் திருட்டைச் செய்து விடுபவர்களும் உண்டு. அறிவுசார் திருட்டை மேற்கொள்ளுவதால் ஏற்படும் விளைவுகள் என்னவாக இருக்கும் என்று தெரியாமல் இருப்பதாலும் இக்குற்றச்செயல் பரவலாக நடந்துவருகிறது.

**பதிப்புரிமைச் சட்டம் அறிமுகம்**

"பதிப்புரிமைச் சட்டம், 1957 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டு, ஜனவரி 1958 முதல் நடைமுறைக்கு வந்தது. அதன் பின்னர் இச்சட்டம் ஆறு முறை திருத்தப்பட்டது, அதாவது 1983, 1984, 1992, 1994, 1999 மற்றும் 2012. இப்பதிப்புரிமைத் திருத்தச் சட்டம், 2012 இல் திருத்தப்பட்டதற்கு மிக முக்கியக் காரணமுண்டு. பதிப்புரிமைச் சட்டம், 1957, 1996 இல் முடிக்கப்பட்ட இரண்டு WIPO இணைய ஒப்பந்தங்களுக்கு இணங்க சட்டத்தைக் கொண்டு வருவது. அதாவது WIPO பதிப்புரிமை ஒப்பந்தம் ("WCT") மற்றும் WIPO செயல்திறன் மற்றும் ஒலிப்பதிவு ஒப்பந்தம் ("WPPT"); இசை மற்றும் திரைப்படத் துறையைப் பாதுகாப்பதற்கும் அதன் கவலைகளைத் தீர்ப்பதற்கும்; உடல் ஊனமுற்றோரின் கவலைகளை நிவர்த்தி செய்வதற்கும், எந்தவொரு படைப்பின் ஆசிரியரின் நலன்களைப் பாதுகாப்பதற்கும்; தற்செயலான மாற்றங்கள்; செயல்பாட்டு வசதிகளை அகற்ற; மற்றும் உரிமைகளை அமல்படுத்துதல். 2012 இல் பதிப்புரிமைச் சட்டத்தின் சில முக்கியமான திருத்தங்கள் டிஜிட்டல் சூழலில் பதிப்புரிமைப் பாதுகாப்பை விரிவுபடுத்துதல் ஆகும். நிறுவனங்கள்; ஆசிரியர்கள் மற்றும் இசையமைப்பாளர்களுக்கான ராயல்டிகளைப் பெறுவதற்கான உரிமையை உறுதி செய்தல், கலைஞர்களுக்கான பிரத்யேக பொருளாதாரம் மற்றும் தார்மீக உரிமைகள், ஆசிரியர்கள் மற்றும் பிற உரிமையாளர்களுக்குப் பதிப்புரிமைச் சங்கங்களில் சம உறுப்பினர் உரிமைகள் மற்றும் உடல் ஊனமுற்றோர் எந்தவொரு படைப்புகளையும் அணுகுவதற்குப் பதிப்புரிமை விதிவிலக்கு" செய்துள்ளது. https://copyright.gov.in/

**பதிப்புரிமைச் செய்வதற்கான வழிமுறை**

நீங்கள் உங்கள் இலக்கியம், கலை, இசை, நாடகம், கணினி மென்பொருள், வடிவமைப்புகள், வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் சின்னங்கள், பெயர்கள், படங்கள் ஒலிப்பதிவு மற்றும் திரைப்படம் உள்ளிட்ட படைப்புகளைப் பதிப்புரிமைச் செய்துகொள்வதற்கு இந்திய அரசால் உருவாக்கப்பெற்ற பதிப்புரிமைப் பிரிவு, தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான துறை (Copyright Division, Department For Promotion of Industry and Internal Trade) என்ற இணையதளத்திற்குச் சென்று உங்களுக்கென்று ஒரு புதிய கணக்கை உருவாக்கிக்கொள்ள வேண்டும். ஆன்லைன் "பதிப்புரிமைப் பதிவுப் படிவம்" நான்கு படிநிலைகளில் நிரப்பப்பட வேண்டும்.

**படிநிலை: 1 (XIV)**

பதிப்புரிமைத் தளத்திற்குச் சென்று Click here for online Copyright Registration என்ற இணைப்பைக் கிளிக் செய்து உள்நுழைந்து படிவம் XIV ஐ பூர்த்தி செய்து, உள்ளிட்ட விவரங்களைச் சேமிக்க SAVE பொத்தானை அழுத்தியவுடன் இரண்டாம் படிநிலைக்குச் செல்லும்.

**படிநிலை: 2 (Statement of Particulars)**

விவரங்களின் அறிக்கை என்ற இரண்டாம் படிநிலையில் விண்ணப்பதாரரின் பெயர், முகவரி மற்றும் குடியுரிமை போன்ற விவரங்களைப் பதிவுசெய்த பின் விண்ணப்பதாரரின் கையொப்பத்தினை 512 KB இல் ஸ்கேன் செய்யப்பட்டு பதிவேற்ற வேண்டும். அதற்குப் பிறகும் சில விவரங்கள் கேட்கப்படும். அதனை நிரப்பி விவரங்களைச் சேமிக்க SAVE பொத்தானை அழுத்தியவுடன் மூன்றாம் படிநிலைக்குச் செல்லும்.

**படிநிலை: 3 (Statements of Further Particulars)**

விவரங்களின் அறிக்கையை நிரப்பவும் என்ற மூன்றாம் படிநிலையில் "இலக்கியம்/ நாடகம், இசை, கலை மற்றும் மென்பொருள்" படைப்புகள் அசல் படைப்பா? ஒரு படைப்பின் மொழி பெயர்ப்பா? பதிப்புரிமை உள்ள ஒரு படைப்பின் தழுவலா? போன்ற வினாக்களுக்கான விவரங்களை உள்ளிட்டு விவரங்களைச் சேமிக்க SAVE பொத்தானை அழுத்தியவுடன் நான்காம் படிநிலைக்குச் செல்லும்.

**படிநிலை: 4 (Payment Details)**

கட்டண விவரங்கள் என்ற நான்காம் படிநிலையில் இணையம்வழிக் கட்டண நுழைவாயில் மூலம் பணம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு பிரிவிலும் பதிப்புரிமம் பெறுவதற்கு 200 முதல் 40,000 வரையிலான தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இலக்கியம் சார்ந்த ஒரு நூலுக்குப் பதிப்புரிமையைப் பெறுவதற்கு 500 ரூபாய் தொகையைச் செலுத்த வேண்டும். படிவத்தை வெற்றிகரமாகச் சமர்ப்பித்த பிறகு, நாட்குறிப்பு எண் (Diary No.) உருவாக்கப்படும். எதிர்காலத் தேவைக்காக அதைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். பின்னர் இலக்கியம், கலைப் படைப்பாக இருந்தால் pdf/jpg வடிவத்தில் பதிவேற்ற வேண்டும். ஒலிப்பதிவாக இருந்தால் mp3 வடிவத்தில் பதிவேற்ற வேண்டும். இலக்கியம்/நாடகம், இசை மற்றும் மென்பொருள்* 10 MB க்கும் குறைவான pdf வடிவில் பதிவேற்ற வேண்டும்.

இறுதியாக 'ஒப்புகைச் சீட்டின்' 1 பிரதி (அச்சு) மற்றும் 'பதிப்புரிமைப் பதிவுப் படிவத்தின்' 1 ஐ print out எடுத்து அஞ்சல் மூலம் Office of the Registrar of Copyrights, Copyright Office, Department of Industrial Policy & Promotion, Ministry of Commerce and Industry, Boudhik Sampada Bhawan, Plot No. 32, Sector 14, Dwarka, New Delhi-110078, Email Address: copyright@nic.in, Telephone No.: 011-28032496 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

நூல், ஆய்வுக் கட்டுரை, கலை, இசை, நாடகம், கணினி மென்பொருள், வடிவமைப்புகள், வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் சின்னங்கள், பெயர்கள், படங்கள் ஒலிப்பதிவு மற்றும் திரைப்படம் உள்ளிட்ட படைப்புகளைப் பதிவு செய்து அனுப்பியதற்குப் பின் 30 நாட்கள் காத்திருக்க வேண்டும். இந்தக் காலக்கெடு எதற்கு என்றால், நமது படைப்பு குறித்து எந்த ஆட்சேபனையும் இல்லை என்ற தகவலைப் பெறுவதற்காக மட்டுமே. இந்தக் காலக்கட்டத்தில் நாம் அனுப்பிய படைப்புக் குறித்து யாரேனும் ஆட்சேபனை தெரிவிக்கவில்லையென்றால் படைப்பில் முரண்பாடுகள் இல்லையென்று எண்ணி தேர்வாளர்களால் பரிந்துரைக்கப்பட்டு அங்கீகரிக்க அனுப்பப்படும். தேர்வாளர்களின் பரிந்துரை அங்கீகரிக்கப்பட்டு விண்ணப்பதாரருக்கு உரிய பதிப்புரிமைச் சான்றிதழ் அனுப்பப்படும்.

ஆட்சேபனை தெரிவித்திருந்தால் நூல் எழுதியவர்க்கும் ஆட்சேபனை தெரிவித்தவர்க்கும் கடிதம் அனுப்பப்படும். அந்தக் கடிதத்தினைக் கொண்டு அவர்கள் விசாரணைக்கு அழைக்கப்படுவார்கள். விசாரணையில் விண்ணப்பித்தவர் சரியான சான்றுகளை ஒப்படைத்துவிட்டால் அவர் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டுப் பதிப்புரிமைக்கு அங்கீகரிக்க அனுப்பப்படும். தேர்வாளர்கள் அந்தப் படைப்பைத் தரம் பிரித்துப் பார்ப்பார்கள்.

அதில் எந்தப் பிரச்சனையும் இல்லை என்றால் பதிவுப்படிவத்தைப் பதிவு செய்வதற்கு ஒப்புதல் வழங்குவார்கள். அந்த ஒப்புதல் அங்கீகரிக்கப்பட்டு விண்ணப்பதாரருக்கு உரிய பதிப்புரிமைச் சான்றிதழ் அனுப்பப்படும்.

ஒருவேளை விண்ணப்பதாரர் விசாரணையில் உரிய சான்றுகளை வழங்கவில்லை என்றால், அவர் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு விண்ணப்பதாரருக்கு நிராகரிப்புக் கடிதம் அனுப்பப்படும். (பின்னிணைப்பு: 2)

**முடிவுரை**

இணையத்தில் ஒருபுறம் மின்னூல்கள் பெருகிவரும் தற்காலச் சூழலில், மறுபுறம் ஆய்வுலகில் அறிவுத் திருட்டும் மிகுதியாக நிகழ்கிறது. ஆகவே ஒவ்வொரு படைப்பாளரும் தமது படைப்புகளைப் பதிப்புரிமைச் செய்துகொள்வது தேவையாக இருக்கின்றது. இத்தகைய பதிப்புரிமையை எவ்வாறு பெறவேண்டும் என்பது குறித்தும் அதற்கான வழிமுறைகள் குறித்தும் இக்கட்டுரை எளிய நிலையில் விளக்கியுள்ளது.

**துணைநின்றவை / Bibliography**

1. Copyright Office, https://copyright.gov.in/
2. Pulavar Kulanthai, 2010, Thirukkural, Saratha Pathippagam, Chennai - 600 014.
3. Bhumi Madhu, 2020 How To Get Copyright: What Are The Types, Advantages, Disadvantages Of Copyright.October 31, 2020 https://www-msmex-in.translate.goog/learn/how-to-get-a-copyright/?_x_tr_sl=en&_x_tr_tl=ta&_x_tr_hl=ta&_x_tr_pto=tc
4. Vijayalakshmi, 2014, Some citation on intellectual theft, https://vallinam.com. my/version2/?p=1392
5. Deepak Gupta https://www.linkedin.com/posts/rama-tyagi-76571aa3_plagiarism-activity 6312083640247521280-nmjR/?trk=public_profile_like_view
6. WIPO - https://www.wipo.int/about-ip/en/

பின்னிணைப்பு : 1 / **Appendix : 1**



# Research scholars to face stiff action for plagiarism

Manash.Gohain@timesgroup.com

**New Delhi:** Soon a research scholar could face cancellation of his or her registration if found to have plagiarised someone else's work and faculty, if found guilty of the same, could be debarred from publishing any work, denied annual increments and disqualfied from supervising any student or scholar.

As part of its effort to have zero tolerance towards plagiarism, the University Grants Commission, has drafted a new policy to curb the menace. It says authorities of higher education institution (HEI) can also take suo motu notice of an act of plagiarism and initiate proceedings.

As per the draft policy, three types of penalties would be imposed on those found guilty of lifting someone else's work.

While in case of "Level 1 and 2" offence, the researchers would get a chance to revise their work, "Level 3" offence, which is "60% similarities" would result in cancellation of the researcher's registration.

That's for plagiarism in non-core areas. However for plagiarism in core areas there will be 'zero tolerance'. As per the new policy "The core work carried out by the student, faculty, staff and researcher shall be based on original ideas and shall be covered by Zero Tolerance Policy on Plagiarism. In case plagiarism is established in the core work claimed, then Plagiarism Disciplinary Authority (PDA) of the HEI shall impose maximum penalty." Core work shall include abstract, summary, hypothesis, observations, results, conclusions and recommendations.

The draft calls for setting up of PDA, Academic Misconduct Panel (AMP) and installation of software to detect plagiarism, among other reforms at universities and colleges across the country. As per the new policy if any member of the academic community has reason to suspect a case of plagiarism, he or she shall report it to the competent/ designated authority of the university. Upon receipt of such a complaint or allegation the university authority shall refer the case to the AMP who in turn shall submit a report to the PDA.

All students submitting thesis, dissertation, term papers, reports or other such documents to the HEI shall submit an undertaking indicating the document has been prepared by him or her and is his/her original work and free of any plagiarism.

**UGC'S PROPOSED PENALTIES**


**Proposed penalties for faculty & researchers**

Level 1 | **Withdraw manuscript submitted for publication and cannot publish any work** for a minimum period of 1 year

Level 2 | **Withdraw manuscript and cannot publish any work for a minimum period of 2 yrs & will be denied right to one annual increment** and will not be allowed to be a supervisor to any student/scholar for a period of two yrs

Level 3 | **Withdraw manuscript & shall not be allowed to publish any work for a minimum period of 3 yrs** & will be denied right to two successive annual increments & will not be allowed to be a supervisor to any student/ scholar for a period of 3 yrs

பின்னிணைப்பு : 2 / **Appendix : 2**


Copyright Registration Workflow
Filing of Application along with fee [DD]
Issue of Diary No.
30 days mandatory waiting for objections
Objection Filed (Y/N)?
No objection
Objection filed
Scrutinization by Examiner
Application accepted (Objections rejected)
Sending Letter to both parties
Application accepted
Discrepancy Found
Discrepancy letter issued to applicant
Reply from both parties
Discrepancy (Y/N)?
Reply from applicant
Hearing by Registrar
No Discrepancy Found
Hearing by Registrar due to rejection
Application Accepted (Y/N)?
Application rejected
Registration Approved (Y/N)? (Dy. Registrar)
Yes
No
Registration Approved
Application rejected
Sending Extracts from Register to the Applicant
Sending Rejection letter to the Applicant
End of Flow